கோயம்புத்தூர் அவிநாசி சாலை உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரையிலான மேம்பாலத்தில் வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருவதை பொதுப்பணித்துறை அமைச்சர் .எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மை செயலாளர் குமார் ஜெயந்த், மாவட்ட ஆட்சித் தலைவர்கிராந்தி குமார் பாடி, நெடுஞ்சாலைகள் துறை தனி அலுவலர் சந்திரசேகர் ஆகியோர் உள்ளனர்.

கோவை மாவட்டம்: அவிநாசி சாலையில்

உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை - உயர்மட்ட சாலைப் பணிகள்!

அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

கோவை, நவ. 5-

கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி சாலையில் உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை உயர் மட்ட சாலை பணிகள், மதுக்கரை மற்றும் கோவைப்புதூர் பகுதியில் நடைபெற்று வரும் மேற்கு புறவழிச்சாலை பணிகள் மற்றும் மேட்டுப்பாளையம் சாலையில் சாய்பாபா காலனி சந்திப்பில் சாலை மேம்பாலம் கட்டுமான பணிகள் ஆகிய பணிகளை பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி சாலையில் உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை உயர் மட்ட சாலை பணிகள், மதுக்கரை மற்றும் கோவைப்புதூர் பகுதியில் நடைபெற்று வரும் மேற்கு புறவழிச்சாலை பணிகள் மேட்டுப்பாளையம் சாலையில் சாய்பாபா காலனி சந்திப்பில் சாலை மேம்பாலம் கட்டுமான பணிகள் ஆகிய வற்றை நேற்று (04.11.2024) பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, நெடுஞ்சாலைகள் துறை தனி அலுவலர் சந்திர சேகர், கோட்டப் பொறியாளர் ஞானமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.நா.கார்த்திக் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

பின்னர் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 664 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்தல், விரிவுபடுத்துதல், சீர்செய்தல் ஆகிய பணிகளுக்கு ரூ.997 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். 652 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024-25 நடப்பாண்டில் 148 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ. 332 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தி மேம்பாடு செய்ய டெண்டர் விடப்பட்டுள்ளது. 7 பாலப்பணிகள் ரூ.9.60 கோடிகளில் முடிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2 பாலப் பணிகள் ரூ.5.70கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுற்றுவட்ட சாலை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. மேற்கு சுற்றுவட்டச்சாலையானது மொத்தமாக 32.43 கி.மீ நீளத்தில் மதுக்கரை அருகில் துவங்கி நரசிம்மநாயக்கன்பாளையத்தில் முடிவடைகிறது. மதுக்கரை முதல் மாதம்பட்டி வரை 11.80 கி.மீ நீளத்திற்கு பகுதி-I ஆகவும், மாதம்பட்டி முதல் கணுவாய் வரை 12.10 கி.மீ நீளத்திற்கு பகுதி-II ஆகவும், கணுவாய் முதல் நரசிம்மநாயக்கன்பாளையம் வரை 8.52 கி.மீ. நீளத்திற்கு பகுதி-III ஆகவும், பிரித்து மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளது. மேற்கு சுற்றுவட்டச்சாலையின் முதற்கட்டமாக, மதுக்கரை முதல் மாதம்பட்டி வரை 11.80 கி.மீ நீளத்திற்கு ரூ.250 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. ஆகஸ்ட் 2025க்குள் இப்பணிகள் முடிக்கப்படவுள்ளது. சாலை அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெறுகின்றதா என்பது குறித்து இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது கட்ட பணிக்காக 95 சதவீதம் நில எடுப்பு பணிகள் முடிவடைந்து, திட்டமதிப்பீடு தயார்செய்யப்பட்டு, நிதித் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது மூன்றாவது கட்ட நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றது. இந்த சாலை அமைப்பதன் மூலம் கேரளா மாநிலத்திலிருந்து நீலகிரி செல்பவர்கள் கோயம்புத்தூர் நகரப்பகுதிக்குள் வராமல் விரைவாக செல்லமுடியும். கோயம்புத்தூர் மாநகர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைக்கும் வகையில் முதலமைச்சர் அவர்களால் இந்த மேற்கு புறவழிச்சாலை அறிவிக்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றது.

ரூ.1791.22 கோடியில் உயர்மட்டச் சாலை

கோயம்புத்தூர் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் நிறைந்த பகுதியானது கோயம்புத்தூர்-அவினாசி சாலையாகும். அவினாசி சாலையில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை ரூ.1791.22 கோடி மதிப்பீட்டில் உயர் மட்டச் சாலை அமைக்கும் பணி 83 சதவீத பணிகள் முடிவுடைந்துள்ளன. பிரதான உயர்மட்ட சாலைப் பணிகள் ஜனவரி 2025க்குள் முடிவடையும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பாலப்பணிகள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டு, ஒப்பந்ததாரரிடம் பணியினை குறித்த காலத்திற்குள் விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

மேட்டுப்பாளையம் சாலையில் ரூ.71.05.கோடி மதிப்பீட்டில் சாய்பாபா காலனி சந்திப்பில் 1.20 கிலோமீட்டர் நீளத்தில் சாலை மேம்பாலம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், மேம்பால சாலையில் துளையிட்டு, சாலையின் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. சிங்காநல்லூர் மேம்பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு இது போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மதுரை வடக்கு : சட்டமன்றத் தொகுதி - ஒன்றிய நகர - பேரூர் - பகுதி கழக BLA-2 கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி - ஒன்றிய / பகுதி கழக BLA-2 கூட்டம்

06.11.2024 - புதன்கிழமை

வ. எண்	ஒன்றியம் / பகுதி	நேரம்	இடம்
1	மதுரை மேற்கு வடக்கு	10.00 AM	குறிஞ்சி மஹால், திருப்பாலை
2	கண்ணனேந்தல் பகுதி	11.00 AM	வட்டக் கழக அலுவலகம், பரசுராமன்பட்டி
3	மதுரை கிழக்கு	03.00 PM	மந்தை திடல், ராஜகம்பீரம்
4	மதுரை கிழக்கு தெற்கு	04.00 PM	தேவி பேலஸ், கருப்பாயூரணி
5	வண்டியூர்	05.00 PM	பங்குனி உத்திரம் மஹால், வண்டியூர்
6	மதுரை கிழக்கு வடக்கு	06.00 PM	சாரா மினி மஹால், ஒத்தக்கடை
7	திருப்பாலை	07.00 PM	மாவட்டக் கழக அலுவலகம், சர்ச் ரோடு, அய்யர்பங்களா.
8	ஆனையூர்	07.45 PM	ஜஸ்வர்யா மஹால், கூடல்புதூர், ஆனையூர்.

சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி - ஒன்றிய/ பேரூர் கழக BLA-2 கூட்டம்

06.11.2024 - புதன்கிழமை

வ. எண்	ஒன்றியம் / பேரூர்	நேரம்	இடம்
1	வாடிப்பட்டி வடக்கு	10.00 AM	ஒன்றியக் கழக அலுவலகம், வாடிப்பட்டி
2	வாடிப்பட்டி பேரூர்	11.00 AM	பேருந்து நிலையம் அருகில், வாடிப்பட்டி
3	சோழவந்தான் பேரூர்	12.00 AM	சந்திரன் மஹால், சோழவந்தான்.
4	வாடிப்பட்டி தெற்கு	12.30 PM	திருவேடகம் தண்ணீர் பிளாண்ட். அருகில்
5	மதுரை மேற்கு	01.30 PM	பாசிங்காபுரம்
6	அலங்காநல்லூர் கிழக்கு	05.00 PM	ஒன்றியக் கழக அலுவலகம், கேட்டுக்கடை அலங்காநல்லூர்
7	அலங்காநல்லூர் பேரூர்	05.30 PM	ஒன்றியக் கழக அலுவலகம், கேட்டுக்கடை அலங்காநல்லூர்
8	அலங்காநல்லூர் மேற்கு	06.00 PM	ஒன்றியக் கழக அலுவலகம், கேட்டுக்கடை அலங்காநல்லூர்
9	பாலமேடு பேரூர்	06.30 PM	ஒன்றியக் கழக அலுவலகம், கேட்டுக்கடை அலங்காநல்லூர்

மேலூர் சட்டமன்ற தொகுதி - ஒன்றியம் / நகரம் / பேரூர் BLA-2 கூட்டம்

06.11.2024 - புதன்கிழமை

வ. எண்	ஒன்றியம் / பேரூர் / நகரம்	நேரம்	இடம்
1	கொட்டாம்பட்டி தெற்கு	10.00 AM	மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம்
2	கொட்டாம்பட்டி கிழக்கு	11.00 AM	ஒன்றியக் கழக அலுவலகம், கொட்டாம்பட்டி
3	கொட்டாம்பட்டி மேற்கு	12.00 PM	மணப்பச்சேரி ஊராட்சி, வெள்ளாலப்பட்டி
4	மேலூர் கிழக்கு	05.00 PM	மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம்
5	மேலூர் வடக்கு	05.30 PM	மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம்
6	அ.வள்ளாலபட்டி	05.45 PM	மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம்
7	மேலூர் தெற்கு	06.00 PM	மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம்
8	மேலூர் நகரம்	06.30 PM	மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம்

அமைச்சர் பி.மூர்த்தி
செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

'அழைப்பு ஏற்பாளர்' பணிக்கு தவறுதலாக அறிவிக்கை வெளியிட்ட இணை இயக்குநர் பணியிடை நீக்கம்'

தமிழ் குறித்து எவரும் எங்களுக்கு பாடம் எடுக்க வேண்டாம்!

சமூக நலத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் அறிக்கை!

சென்னை, நவ.5-

'அழைப்பு ஏற்பாளர்' பணிக்கு தவறுதலாக அறிவிக்கை வெளியிட்ட இணை இயக்குநர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும், தமிழ் குறித்து எங்களுக்கு எவரும் பாடம் எடுக்க வேண்டாம் என்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்களின் அறிக்கை வருமாறு:-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் இயங்கும், சமூக நல ஆணையரகம் மூலம் பாதிப்புக்கு உள்ளாகும் மகளிருக்கு உதவிட பெண்களுக்கான கட்டுப்பாட்டு மையம், "மகளிர் உதவி எண்.181" சென்னையில் செயல்பட்டு வருகிறது. மகளிர் உதவி எண்.181 பணியிடத்தில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிடும் பொருட்டு, விண்ணப்பங்கள் பெற்றிட tn.gov.in என்ற இணையதளத்தில் ஆட்சேர்ப்புக்கான அறிவிக்கை, சமூக நல ஆணையரக இணை இயக்குநரால் பதிவேற்றம் செய்யப்பட்டது. அதில் "அழைப்பு ஏற்பாளர்" (Call Responders) என்று குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்திற்கு தேவையான தகுதிகள் என தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி என தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

இந்த ஆட்சேர்ப்புக்கான அறிவிக்கை தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வந்தவுடன், அவ்விளம்பரம் உடனடியாக இணையதளத்தில் இருந்து நீக்கப்பட்டு, தமிழ் மற்றும் ஆங்கிலம் தெரிந்த

நபர்கள் விண்ணப்பிக்கலாம் என்று திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு அறிவிக்கை உடனடியாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

தமிழ் மொழியினை உயிருக்கு மேலாய் மதிக்கும் முதல்வர்!

மேலும், தவறுதலாக இணையத்தில் பதிவேற்றம் செய்த இணை இயக்குநர் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாய்மொழியாம் தமிழ் மொழியினை உயிருக்கும் மேலாய் மதிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் எங்கள் முதலமைச்சர் அவர்கள் தலைமையில், அனைத்து அரசுத் துறைகளிலும் தமிழ் மட்டுமே முக்கிய மொழியாக உள்ளது. மாண்பமை நீதிமன்றம், ஒன்றிய அரசுடனான கடிதப் போக்குவரத்து போன்றவற்றிற்கு மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்து, அய்யன் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டமும், 133 அடியில் வானுயர சிலையும் அமைத்தது, உலகத் தமிழ் மாநாடு நடத்தியது, தமிழுக்கு செம்மொழி சிறப்பு பெற்றுத் தந்தது என எண்ணிலடங்கா பெருமைகள் கொண்டது தான் திராவிட முன்னேற்றக் கழக வரலாறு. தமிழர் பெருமை கூறும் கீழடி அருங்காட்சியகம் அமைத்து, உலகத்தின் பார்வையை நம் மீது திருப்பியது அண்மைக் கால வரலாறு. மேலும், அரசுப்பணிகளில் தமிழ் மொழியில் பயின்றவருக்கு முன்னுரிமை அளித்து அரசாணை வெளியிட்ட அரசு, நமது திராவிட மாடல் அரசு. தமிழ்நாடு அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழ்நாட்டு இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும், அனைத்து போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாக கட்டாயமாக்கப்பட்டது என தமிழ்மொழி வளர்ச்சிக்கான இவ்வரசின் பல்வேறு சாதனைகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

ஒரு அரசு அலுவலர் செய்த தவறை வைத்துக் கொண்டு அரசியல் செய்யும் நிலையில் சிலர் உள்ளதைப் பார்த்தால் பரிதாபமாக உள்ளது.

தமிழ் குறித்து எங்களுக்கு எவரும் பாடம் எடுத்து கூச்சல் போட வேண்டியதில்லை. இதனால் மக்கள் ஏமாறப் போவதில்லை.

நமது முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில், தமிழ் மொழி மென்மேலும் சிறப்புகள் பெற்று வளர்ந்து வருகிறது. இதனைக் காண சகிக்காதவர்கள் தான் இப்போது கூக்குரல் இடுகிறார்கள். அதனை புறம் தள்ளி, எங்கள் தாய்மொழியாம் தமிழ் வழி பயணத்தை சிறப்புற தொடர்வோம்.

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட திட்ட அலுவலகம், தொடக்க கல்வி அலுவலகங்களில் அமைச்சர்அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (04.11.2024) திடீர் ஆய்வு மேற்கொண்டு பள்ளிகளுக்கு விலையில்லா பொருட்கள் அனுப்பபட்டுள்ள விவரங்கள் மற்றும் மாவட்ட அளவில் தேர்ச்சி விகிதம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

ஆர்.டி சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரை ! டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கன்னிகை ஜி. ஸ்டாலின் பங்கேற்பு!

பெரம்பூர் தெற்கு பகுதியில் பாக நிலை முகவர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் அறிவிப்பு!

சென்னை,நவ.5-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதியில் பாக நிலை முகவர் கூட்டம் நடைபெறுகிறது. இதில் மாவட்டபொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி. ஸ்டாலின் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர்.

இக்கூட்டம் பகுதி செயலாளர் க.ஜெயராமன் தலைமையில் இன்று 05:11.2024 செவ்வாய்க்கிழமை மாலை 5:00 மணி, இடம் : மைசூர் மஹால் இ.எச் சாலை வியாசர்பாடி சென்னை .39 - நடைபெறுகிறது.

மேற்படி பாக நிலை முகவர் (BLA 2)கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்

மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள்.பாக நிலை முகவர்கள் (BLA2), கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலாளர் க.ஜெயராமன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (04.11.2024) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் துறையின் சட்டமன்ற அறிவிப்புகளின் தற்போதைய நிலை மற்றும் துறை தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு இணைச் செயலாளர் அமர் குஷ்வாஹா, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல்துறைத் தலைவர் க.ஜோஷி நிர்மல்குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.